பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 11 | ஞாயிற்றுக்கிழமை | 23.02.2025 | அதிர்வு 204

## ‘பி.பி.சி. தமிழ் சேவை’ ஆனந்தி காலமானார்!



பி.பி.சி. தமிழ் சேவையின் முன்னாள் ஒலிபரப்பாளர் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் இயற்கை எய்தினார். 06

# தமிழருக்கான தீர்வுத் திட்டத்தை அரசு தரும் என்று எதிர்பார்க்கவே முடியாது!

## நாங்கள்தான் கூட்டு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அறிவுறுத்து



”தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கத்தைப் பொறுத்தமட்டில், அரசு எமக்கான தீர்வுத் திட்டத்தைத் தரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மாறாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து, தமிழர்கள் சார்ந்து ஒரு கூட்டு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இப்போது நாங்கள்தான் பசியுடன் இருக்கின்றோம். பசியுடன் இருப்பவர்கள் தானே என்ன தேவை என்று கேட்க முடியும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 06



# சிவஞானத்தையும் சுமந்திரனையும் குறிவைத்து பொன்னம்பலம் தாக்குவது அபத்தமான செயல்

## தமிழரசுக் கொழும்புக் கிளைத் தலைவர் அறிக்கை

(விரிவான செய்தி 5 ஆம் பக்கத்தில்)

# ராஜபக்ஷக்களின் இரகசியங்கள் வெளியாகும் அச்சத்திலா “மித்தெனிய கஜ்ஜா” படுகொலை?



## சபையில் சஜித் அணி கேள்வி

“ராஜபக்ஷக்களின் இரகசியங்கள் வெளியாகும் என்ற அச்சத்தில் “மித்தெனிய கஜ்ஜா” படுகொலை செய்யப்பட்டார் என்று மக்கள் மத்தியில் பேசப்படுகின்றது. இந்த நபர் ராஜபக்ஷக்களுக்காகவே அரசியல் செய்தார். ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ராஜபக்ஷக்ளுக்கு எதிராகச் செயற்பட்டார். ஆகவே, இந்தக் கொலை குறித்து முறையாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலீப் வெதஆராச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் மீதான 5 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து விசேட கவனம் செலுத்தப்பட 06




வடக்கில் மீனவ அமைப்புக்கள் ஏராளம். இடத்துக்கும், பெயருக்கும், அரசியல் நிலைப்பாட்டுக்கும் என ஒவ்வொரு மீனவர் சங்கங்கள். அவற்றை இணைத்து சம்மேளனங்கள், சமாஜங்கள் என்று பல கட்டமைப்புகள். தொழிற்சங்கங்கள் போல. அந்தக் கட்டமைப்புக்களை பிரிவுகள், இடங்கள் ரீதியாகப் புரிந்து கொள்வதே ஒரு பெரிய விடயம்.

அந்த வகையில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தீவகக் கடற்றொழிலாளர்கள் அமைப்பு என்ற பெயரில் ஒரு மீனவ அமைப்பு யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியது.

மண்டைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, வேலணை, புங்குடுதீவு போன்ற பிரதேசங்களின் கடற்றொழில் அமைப்புகள் என்ற பெயரில் அவர்களது ஊடகவியலாளர் சந்திப்பு இடம் பெற்றது. வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மீனவர்களின் கவனவீர்ப்புப் போராட்டம் என்று அங்கு அறிவிக்கப்பட்டது.

புதிய முகங்கள், புதிய தரப்புகள் என்று தோன்றியமையால் விடயம் என்ன, ஏது 06

# தமிழர்களை ஏமாற்றிய கோட்டாவை விட மோசமான விளைவை சந்திக்க நேரிடும்

## சாணக்கியன் சபையில் எச்சரிக்கை

"புதிய அரசமைப்பு உருவாக்கத்தை தாமதப்படுத்துவது இந்த நாட்டை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும். மக்களை ஏமாற்றினால் கோட்டபய ராஜபக்ஷவை விடவும் மிக மோசமான விளைவை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான 5 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"2025 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தின் ஊடாக பாரிய அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.2015 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 58சதவீதமளவில் தான் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒதுக்கீடுகளின் செயலாற்றுகையை விளங்கிக் கொள்ளமுடியும்.

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு பெருமளவிலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. முல்லைத்தீவு வட்டுவாக்கல் பாலத்தை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு மாகாண மக்கள் பெருமளவில் வாக்களித்தார்கள். ஆனால் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் 6 சதவீதமான அளவு தான் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வரவு, செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணம் முழுமையாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஒதுக்கீடுகள் வரவு, செலவுத் திட்ட பதிவுகளில் இருக்கும் ஆனால் நடைமுறையில் ஏதும் நடக்காது. குறைந்தளவான நிதியை ஒதுக்கி வடக்கு மாகாண மக்களைஏமாற்றலாம் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நினைக்க கூடாது.

வடக்கு மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள். காணாமல் போனோரின் உறவுகள் 2,900 நாள்களை கடந்து போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த விடயத்துக்கு ஒரு முன்மொழிவை கூட இதுவரையில் முன்வைக்கவில்லை.

இந்த நாட்டில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லையென நீதியமைச்சர் குறிப்பிடுகிறார். பட்டியலை தருமாறு என்னிடம் கேட்கிறார். இந்த நாட்டில் நான் நீதியமைச்சரா அல்லது அவர் நீதியமைச்சரா, வடக்கில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் பொறிமுறை வகுக்கப்படவில்லை.

அபிவிருத்திகளை செய்து இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்று கருத வேண்டாம். முன்னாள் ஜனாதிபதி




மஹிந்த ராஜபக்ஷ கோடிக்கணக்கில் அபிவிருத்திகளை செய்தார். ஆனால் அவரால் கூட பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியவில்லை. நிலையான அரசியல் தீர்வு ஊடாக மாத்திரமே எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். வரவு செலவுத் திட்டத்தில் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை.இதற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தக்க பதில் அரசாங்கத்துக்கு கிடைக்கும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வரை புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து அவதானம் செலுத்த முடியாது என்று குறிப்பிடப்படுகிறது. புதிய அரசமைப்பை உருவாக்காமல் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேசிய மற்றும் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் முன்னேற முடியாது. தேசிய உற்பத்தியை மேம்படுத்த வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. அவ்வாறாயின் எமது மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தீர்வினை தாருங்கள். பசுக்களை கொலை செய்யப்படும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் தான் எமது மக்கள் பண்ணைத் தொழிலில் ஈடுபடுகிறார்கள்.

வரவு, செலவுத் திட்டத்தில் புதிதாக 'பிம்சவிய' திட்டம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டுகாலப்பகுதியின் வனவளத்துறை வரைப்படத்தை அமுல்படுத்தினால் எமது மக்களின் காணி பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தொல்லியலாளர்கள் எமது மக்களின் காணிகளை ஆக்கிரமித்துள்ளார்கள். இந்த அரசாங்கத்திலும் இந்த நிலையே காணப்படுகிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதி மீது நம்பிக்கை கொண்டே வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினார்கள். புதிய அரசமைப்பு உருவாக்கத்தை அரசாங்கம் கிடப்பில் போட்டுள்ளது. தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தது தவறு என்பதை வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெளிப்படுத்துவார்கள்," என்றார்.

# சிவாஜிலிங்கம் மீண்டும் அவசர சிகிச்சைப் பிரிவில்



தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் சுகவீனம் காரணமாக மீண்டும் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.



# எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் எச்சரிக்கை மட்டத்தில் வெப்பநிலை

நாட்டின் பல பகுதிகளில் எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் வெப்பநிலையானது எச்சரிக்கை மட்டத்துக்கு உயர்வடையக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி வடக்கு, வடமத்திய, வடமேல், மேல் மற்றும் சபரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் வெப்பநிலை அதிகரிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நோர்வூட் பிரதேச செயலகத்தை ஹட்டனுக்கு மாற்ற வேண்டாம்

## அரசாங்கத்திடம் ஜீவன் கோரிக்கை

“நோர்வூட் பிரதேச செயலகத்தை ஹட்டன் பகுதிக்கு மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக தெரியவருகிறது. அவ்வாறு செய்தால் அங்குள்ள இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்படுவார்கள்.”

– இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“நல்லாட்சி அரசாங்கம் உள்ளூராட்சி சபைகளை பிரிப்பதற்கு தீர்மானித்திருந்தது. அதேநேரம் காலிக்கும் நுவரெலியாவுக்கும் மாவட்ட செயலகங்களை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தது. ஆனால் அதனை அவர்களால் செயற்படுத்த முடியவில்லை. நாங்கள் அரசாங்கத்தை எடுத்த போது நான் அமைச்சராக இருந்து ஆரம்பமாக நோர்வூட் பிரதேசத்தில் பிரதேச செயலகம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தேன்.

ஏற்கனவே இதனை இங்கு அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கி இருந்தது. அந்த பகுதியில் 2இலட்சத்து 14ஆயிரம் பேர் வாழ்ந்து வருகிறார்கள்.அங்கு பிரதேச செயலகம் வரவேண்டும் என்று அனைவரதும் கோரிக்கையாக இருந்தது. அதனால் நாங்கள் அதனை அமைக்க நடவடிக்கை எடுத்தாம்.

ஆனால் அந்த பிரதேச செயலகத்தை ஹட்டன் ரயில் நிலையம் அமைந்திருக்கும் மேல் பகுதிக்கு மாற்றப்போவதாக தற்போது பிரச்சினை ஒன்று எழுந்துள்ளது. அவ்வாறு இடம்பெற்றால் அது மிகப்பெரிய தவறாக அமையும். நோர்வூட் பிரதேச செயலகத்தில் போதுமான ஆளணி இல்லாமல் இருப்பதாலே அதனை மாற்ற மாற்ற வேண்டும் என்று



தெரிவிப்பதற்கு பிரதான காரணமாகும். இதில் குறித்த பிரதேச செயலகத்தை ஹட்டன் பகுதிக்கு இடமாற்றி, இரண்டரை லட்சம் மக்களை சிரமத்துக்கு உள்ளாக்குவதா அல்லது பிரதேச செயலகத்துக்கு தேவையான ஆளணியை பெற்றுக் கொடுப்பதா இலகுவான விடயம் என்பதை அரசாங்கம் பார்க்க வேண்டும்.

இந்த விடயம் காரணமாக அந்த பகுதி மக்கள் மிகவும் விரக்தியில் இருக்கின்றனர். மலையக மக்கள் பாரியளவில் இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்தவர்கள். அதனால் அரசாங்கம் நோர்வூட் பிரதேச செயலகத்தை மாற்றவேண்டும் என்றால் ஆரம்பமாக அந்த பகுதி மக்களிம் கருத்து கேட்க வேண்டும்.

அதேபோன்று அங்குள்ள வியாபாரிகள், சிவில் அமைப்பினர் புத்திஜீவிகளிடம் கேளுங்கள் அப்போது அரசாங்கத்துக்கு உண்மை நிலை தெரியவரும். எனவே அரசாங்கம் இந்த தவறை செய்ய கூடாது என்றே நான் கேட்டுக்கொள்கிறேன்.”– என்றார்.

# ரி - 56 ரக துப்பாக்கிகள் தொடர்பில் தகவல் வழங்குவோருக்கு சன்மானம்

## பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய அறிவிப்பு




"சமூகத்தில் ஆயுத புளக்கம் அதிகரித்துள்ளதால் அவற்றால் இடம்பெறக் கூடிய குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக ரி- 56 ரக துப்பாக்கிகள் தொடர்பில் தகவல் வழங்குவோருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த காலங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு காணப்பட்ட அரசியல் பாதுகாப்பு காரணமாக அவர்களை பொலிஸ் சேவைகளில் இணைத்துக் கொள்ளக் கூடிய நிலைமை கூட காணப்பட்டது. ஆனால் தற்போது அந்த அரசியல் பாதுகாப்பு நீங்கியுள்ளது.

தமது குற்றச்செயல்களை தொடர்ந்தும் இந்நாட்டுக்குள் முன்னெடுக்க முடியாது என்பதை உணர்ந்ததால் தான் அவர்கள் வெளிநாடுகளிலிருந்து இவற்றை வழிநடத்துகின்றனர். நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற 58 குழுக்களும், அவற்றைப் பின்பற்றுகின்ற 1400 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர். இவை முறைப்படி பட்டியலிடப்பட்டுள்ளதோடு, அவற்றுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குபவர்கள் தொடர்பிலும் புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளன. இவற்றை வழிநடத்தும் பிரதான சந்தேக நபர்கள் வெளிநாடுகளிலிருக்கின்றனர். அவர்களை கைது செய்வதற்கு சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புக்களுடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு 75 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும், 18 கத்திக்குத்து அல்லது வாள்வெட்டு சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இவ்வாண்டு இதுவரையான காலப்பகுதியில் 17 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும், 5 கத்திக்குத்து அல்லது வாள்வெட்டு சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த சம்பவங்களில் நேரடியாக அல்லது மறைமுகமாக பொலிஸ் மற்றும் முப்படையிலுள்ள சிலரின் ஒத்துழைப்புக்களும் கிடைத்துள்ளமையும் இனங்காணப்பட்டுள்ளது. அதற்கமைய இரு பொலிஸார், ஒரு இராணுவ அதிகாரி, இராணுவத்திலிருந்து விலகிய 7 பேர், ஒரு விமானப்படை அதிகாரி ஆகியோர் இவ்வாறான குற்றச் செயல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பில் அடையாளங்காணப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு செப்டெம்பர் தொடக்கம் இதுவரையில் 13 ரி -56 ரக துப்பாக்கிகள், 21 பிஸ்டல்கள், 15 ரிவோல்வர்கள், ஒரு ஏ.கே. 47 ரக துப்பாக்கி, 805 வீட்டில் தயாரிக்கப்பட்ட வெடி மருந்துகள், 75 போர 12 ரக துப்பாக்கிகள், 10 நாட்டு துப்பாக்கிகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்தோடு 309 கிலோ கிராம் ஹெரோயின், 97 கிலோ கஞ்சா, 123 கிலோ கேரள கஞ்சா, 312 கிலோ கஞ்சா பொட்டளங்கள், 383 கிலோ ஐஸ் போதைப்பொருள், 6430 லீற்றர் சட்ட விரோத மதுபானம் என்பனவும் பொலிஸாரின் சுற்றிவளைப்புக்களில் கைப்பற்றப்பட்டுள்ளன. சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் வெளிநாடுகளில் தலைமறைவாகியிருந்த 19 சந்தேகநபர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். அதற்கமைய 199 சிவப்பு அறிவிப்புக்கள், 90 நீல அறிவிப்புக்கள், 4 மஞ்சள் அறிவிப்புக்களும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகளிலிருந்து இயக்கப்படும் குற்றச் செயல்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்புக்களில் 239 தொலைபேசிகள், 145 சிம் அட்டைகள், 1430 கிராம் ஐஸ் போதைப்பொருள், 5 கிராம் ஹெரோயின் 400 போதை மாத்திரைகள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன. மேல் மற்றும் தென் மாகாணங்களிலேயே இந்த குழுக்களின் செயற்பாடுகள் அதிகமாகவுள்ளன. எனவே இம் மாகாணங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் தப்பிச் செல்ல முடியாதவாறு கடற்பகுதிகளிலும் கடற்படை பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சமூகத்தில் ஆயுத புளக்கம் தொடர்பிலும் தகவல்கள் கிடைத்துள்ளன. இவை தொடர்பில் தாம் அறிந்த தகவல்களை பாதுகாப்பு துறையினருக்கு வழங்க வேண்டிய பொறுப்பு பொது மக்களுக்கும் இருக்கிறது. இவ்வாறான தகவல்களை 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும். தகவல் வழங்குபவர்களின் தனித்துவத்தன்மை பாதுகாக்கப்படும். ரி - 56 ரக துப்பாக்கி தொடர்பில் தகவல்களை வழங்கி, அவை கைப்பற்றப்பட்டால் அந்த தகவலை வழங்கியவர்களுக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும்." என்றார்.

# 18 இந்திய மீனவர்கள் கைது

(ந.லோகதயாளன்)

இலங்கை கடற் பரப்பிற்குள் எல்லை தாண்டிய 18 இந்திய மீனவர்கள் இன்று அதிகாலை கடற்படையினராலல் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையின் மன்னார் கடற்பரப்பிற்குள் அனுமதியின்றி உள் நுழைந்து எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 18 இந்திய மீனவர்களே இன்று அதிகாலை மூன்று ட்ரோலர் படகில் இழுவை மடியில் ஈடுபட்ட சமயம் கைது செய்யப்பட்டனர். 3 ட்ரோலர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.


கைது செய்யப்பட்ட மீனவர்கள் கிளிநொச்சி கடற்படை தளத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொண்டு வரப்பட்டஇந்திய மீனவர்களும் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் ஊடாக நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.



# சிவஞானத்தையும் சுமந்திரனையும் குறிவைத்து பொன்னம்பலம் தாக்குவது அபத்தமான செயல்

## தமிழரசுக் கொழும்புக் கிளைத் தலைவர் அறிக்கை



"ஒற்றுமை என்ற கோசத்தின் பின் ஒளிந்துகொண்டு தமிழரசுக் கட்சியைப் பிளவுபடுத்தவும் கட்சித் தலைவர்களை, குறிப்பாக, கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனையும், தலைவர் சிவஞானத்தையும் குறிவைத்துத் தாக்குவதற்கும் மேற்கொள்ளப்படும் நாடகம் அரங்கேற்றப்படுவதற்கு கட்சி ஒருபோதும் இடமளிக்காது என்பதனை பொன்னம்பலம் புரிந்துகொள்ளவேண்டும்."

– இவ்வாறு காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னம்பலத்துக்குப் பதிலளிக்கும் விதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் மத்திய செயற்குழு உறுப்பினருமான சி.இரத்தினவடிவேல் நேற்றுத் தாம் வெளியிட்ட ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கடந்த 16 ஆம் திகதி களுவாஞ்சிக்குடியில் கூடியபோது தமிழர் நலன் சார்ந்ததும் கட்சி நலன் சார்ந்ததுமான பல முக்கிய முடிவுகளை மேற்கொண்டிருந்தது. அவை யாவும் ஊடகங்கள் வாயிலாக அன்றைய தினமே மக்களுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தன.

இன்று 22 ஆம் திகதி காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னம்பலம் அவர்கள் கூட்டியிருந்த ஊடக சந்திப்பின்போது தமிழரசுக் கட்சி களுவாஞ்சிக்குடிக் கூட்டத்தில் மேற்கொண்டிருந்த முக்கிய தீர்மானமொன்று தொடர்பில் தப்பும் தவறுமான விடயங்களைத் தெரிவித்திருந்ததன் காரணமாக இந்தத் தெளிவுபடுத்தல் அவசிமாகின்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அடிப்படையிலும் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் என்ற அடிப்படையிலும் இந்தத் தெளிவுபடுத்தலைப் பகிரங்கப்படுத்தவேண்டிது அவசியமாகிறது.

தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கொள்கையின் அடிப்படையில் கடந்த 75 ஆண்டுகளாகச் செயற்பட்டு, அந்தக் கொள்கை நிலைப்பாட்டில் தொடர்ந்தும் பயணிக்கின்றது. இதில் எந்த விட்டுக்கொடுப்புக்களுக்கும் இடமில்லை. தந்தை செல்வாவுடனும், அண்ணர் அமிர்தலிங்கத்துடனும் அவர்களது சாத்வீகச் செயற்பாட்டிலும், பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியற் கோட்பாட்டுடனும் இணைந்து பயணித்த அரசியற் தெளிவுள்ள பலர் இன்னமும் கட்சியுடன் இணைந்து செயற்படுகிறார்கள் என்பதைஉ முதற்கண் இங்கே குறிப்பிடுவது பொருத்தமானது. எனவே தமிழ் மக்களுக்கு உகந்த அந்தத் தீர்வுகளை எட்டுவது தொடர்பில் கட்சி மிகவும் நிதானமாகவும் தீர்க்க தரிசனத்துடனும் செயற்படுகின்றது. புதிதாக திரு. பொன்னம்பலம் பாடம் எதுவும் எடுக்க வேண்டிய நிலையில் கட்சி இல்லை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

தற்போதைய நிலையில் அரசியற் சீர்திருத்தம் தொடர்பில் முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்காக 7 உறுப்பினர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினமே அதன் முதற்கூட்டமும் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலும் மத்திய செயற்குழுவிலும், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் தலைவர் சிவஞானம் அவர்கள் பொன்னம்பலத்திற்கு பதிற் கடிதம் ஒன்றினை விவரமாக எழுதியுள்ளார். அதில் எந்தவித முரண்பாடுகளுக்கும் இடம் இல்லை.

சுமந்திரன் அவர்கள் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சிவஞானம் அவர்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு முன்பின் முரணான பதிலைத் தமக்கு அனுப்பியுள்ளார் என பொன்னம்பலம் அவர்கள் தெரிவித்திருப்பது மிகவும் அபத்தமானது.

2016-2019 வரை மேற்கொள்ளப்பட்டிருந்த அரசியல் வரைவு, அதற்கு முன்பும் பின்புமாக வெவ்வேறு அரசாங்கங்களுக்கு கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் யாவற்றையும் கருத்திற்கொண்டு அவற்றில் உள்ள ஏற்புடைய விடயங்களையும் இன்னும் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களையும் உள்ளடக்கியதான யோசனைகளை புதிய அரசுக்குச் சமர்ப்பிக்கும் பணி அந்த 7 உறுப்பினர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வேறு ஏதேனும் ஆலோசனைகளை வேறு தரப்பினர் முன்வைத்தால் அவற்றையும் உள்ளடக்கி முன்கொண்டு செல்வதில் கட்சிக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை.

ஆனால் தாம் முன்னெடுக்கும் யோசனைகளுக்கு ஏனைய தரப்பினர் வரவேண்டும் என்கிற திரு.பொன்னம்பலத்தில் கடும் நிலைப்பாட்டின் பின் போகவேண்டிய வங்குரோத்து நிலை தமிழரசுக் கட்சிக்கு ஏற்புடைய தொன்றல்ல.

தவிரவும் ஒற்றுமை என்ற கோசத்தின் பின் ஒளிந்துகொண்டு தமிழரசுக் கட்சியைப் பிளவுபடுத்தவும் கட்சித் தலைவர்களை, குறிப்பாக, கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனையும், தலைவர் சிவஞானத்தையும் குறிவைத்துத் தாக்குவதற்கும் மேற்கொள்ளப்படும் நாடகம் அரங்கேற்றப்படுவதற்கு கட்சி ஒருபோதும் இடமளிக்காது என்பதனை பொன்னம்பலம் புரிந்து கொள்ளவேண்டும். அவரது பிந்திய பேட்டியில் இந்த நாடகம்தான் கனகச்சிதமாக அரங்கேற்றப்பட்டுள்ளது என்பதனைப் புரிந்துகொள்வதற்கு எவருக்கும் விசேடமான அரசியல் அறிவு வேண்டியதில்லை. - என்று உள்ளது.

# ஆசியாவின் சிறு மீன்பிடியாளர்களின் மாநாடு இன்று முதல் மூன்று தினங்கள் கொழும்பில்!

(ந.லோகதயாளன்)

ஆசியாவின் சிறு மீன்பிடியாளர் மாநாடு இன்று 23 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

ஆசியாவின் 9 நாடுகளைச் சேர்ந்த சிறு மீன்பிடியாளர்கள் 50 பேர் இந்த மாநாட்டில் பங்குகொள்ளவுள்ளனர்.

ஆசிய நாடுகளான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், வியட்நாம், மியன்மார், தாய்லாந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 50 பேர் இந்த மாநாட்டில் பங்குகொள்கின்றனர்.

கொழும்பில் சங்கரலா விடுதியில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் இலங்கையின் இருந்து பின்வரும் பிரதிநிதிகள் பங்குபற்றுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து ஜமால்தீன், வடக்கு மாகாணத்தில் இருந்து அன்னராசா ஆகியோருடன் நீர்கொழும்பு, காலி, கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்த நால்வர் மற்றும் பேராசிரியர் ஒஸ்கா அமரசிங்க, தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க கேமன் குமார மற்றும் அகிலன் கதிர்காமர் போன்றோரும் இந்த மாநாட்டில் பங்குகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்று தேடிப் பார்த்தேன்.

பழைய அரசின் காலத்திலும் கடற்றொழில் அமைச்சின் (அமைச்சரின்) கவனிப்பில் பல அமைப்புக்கள் இவ்வாறு பயன்படுத்தப்பட்டன. அதன் தொடர்ச்சி தான் இப்போதைய அமைச்சரின் இந்தக் கடற்றொழில் அமைப்பு என்றும் தெரிய வந்தது.

இன்றைய தினம் இந்தியாவில் இருந்து – குறிப்பாக தமிழகத்திலிருந்து – சில மீனவப் பிரதிநிதிகள் கொழும்பு வருகின்றனர். கொழும்பில் அரச பிரதிநிதிகள் சிலரையும், கடற்றொழில் அமைச்சரையும்சந்திக்கும்அக்குழுவினர்,அடுத்து வரும் தினங்களில் யாழ்ப்பாணத்திற்கும் பயணிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழில் எந்த மீனவ அமைப்பின் பிரதிநிதிகளை அவர்கள் சந்திக்கிறார்கள் என்பதை அறிந்த சம்பந்தப்பட்ட துறை அமைச்சர், யாழில் உள்ள தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் புதிய மீனவ அமைப்பை உருவாக்கி, அவர்களைக் கொண்டு செய்தியாளர் சந்திப்பையும் நடத்தச் செய்திருக்கிறார் என சில வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

இந்தியாவிலிருந்து வரும் மீனவப் பிரதிநிதிகள் இங்கு யாழ்ப்பாணத்தில் மற்றைய மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்திப்புக்கு ஏற்பாடு செய்த தினத்தில், தாம் அமைத்த புதிய மீனவ அமைப்பின் ஏற்பாட்டில் ஒரு கவன ஈர்ப்புப் போராட்டத்தை இங்கு நடத்தச் செய்து, இந்திய மீனவர்கள் தரப்போடு பேச விருக்கும் உள்ளூர் மீனவ அமைப்புகளுக்கு ஒரு தலையிடியைக் கொடுக்க இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கின்றனர் என்பதும் வெளிப்பட்டது.

பிரச்சினைக்குரிய மீனவத் தரப்புகள் நேரில் சந்தித்துப் பேசி, தங்களுக்குள் சுமூகமாகத் தீர்வைக் காணக்கூடிய வாய்ப்புக்கு ஆப்படிப்பவர்கள் யார் என்பதை மக்கள் புரிந்து கொண்டால் நல்லது.

\+ + +

அவர் ஓர் கிறிஸ்தவ திருச்சபையின் போதகர். இப்போது பணியில் ஓய்வு பெற்றுவிட்டார். மாலை வேலைகளில் 'வோக்கிங்' வரும்போது என்னோடு கலந்துரையாடுவார். நேற்று அவர் சொன்ன செய்தி வாசகர்களோடு பகிரத்தக்கது.

"சகோதரரே! நல்ல காலம் பொதுத் தேர்தல் ஏற்கனவே நடந்து முடிந்துவிட்டது. நீதிமன்றத்துக்குள் வைத்துத் துப்பாக்கி பிரயோகம் செய்து ஒருவரைச் சுட்டுக்கொன்ற பிரதான சந்தேக நபர் குறித்து முகப்புத்தகங்களிலும் சமூக ஊடகங்களிலும் சிலாகித்து வரும் செய்திகளை பார்த்தால், தப்பித்தவறி இந்தச் சம்பவம் பொது தேர்தலுக்கு முன்னர் நடந்து, காவலில் இருந்தபடியே பொதுத் தேர்தலில் இந்த சந்தேக நபர் போட்டியிட்டிருந்தால் யாழ்ப்பாணத்து டாக்டர் போல இவரும் நிச்சயம் எம்.பியாகி இருப்பார் என்று தோன்றுகின்றது. நல்ல காலம் தேர்தல் நேரத்துடன் முடிந்து விட்டது." என்றார் அந்த ரெவரண்ட்(அறத்திரு).

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, தென்னிலங்கையிலும் இத்தகைய பித்து (பீனி) பிடித்த கூட்டம் ஒன்று இருப்பது குறித்து அவர் மனம் நொந்து கொண்டார்.

நாட்டையும் இந்த ஆட்சியாளர்களையும் நொந்து கொள்ள முயல்வது அபத்தமாகும். மக்களைத்தான் நொந்து கொள்ள வேண்டும்....!

## 'பி.பி.சி. தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"ஆனந்தி அக்கா" என்று அன்புடன் அழைக்கப்பட்ட திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம், தமிழ் ஒளிபரப்பில் ஒரு முன்னோடி நபராக இருந்தார்.

பி.பி.சி. தமிழ் சேவையில் இணைந்த முதல் தமிழ்ப் பெண்மணியாக தடைகளைத் தாண்டி பி.பி.சி. தமிழோசையின் மூத்த அறிவிப்பாளர் ஆவார்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரியைச் சேர்ந்த இவர் இலங்கை வானொலியில், தயாரிப்பாளராகப் பணிபுரிந்த காலத்தில் பல வானொலி நாடகங்களில் நடித்துடன் அறிவிப்பாளராகவும் பணிபுரிந்திருந்தார்.

அதன்பின்னர் 1970களில் இலங்கையில் இருந்து பிரித்தானியாவுக்குப் புலம்பெயர்ந்து, பி.பி.சி. தமிழோசையில் பகுதிநேர அறிவிப்பாளராகப் பணியாற்ற ஆரம்பித்து ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாக அங்கு நிரந்தர அறிவிப்பாளராக மூத்த தயாரிப்பாளராகவும் பணியாற்றி 2005இல் ஓய்வு பெற்றார்.

---

## ராஜபக்ஷக்களின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும். இந்த ஒரு வாரத்துக்குள் பல இடங்களில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சந்தேகநபர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். மித்தெனிய பகுதியில் தந்தையும், இரண்டு பிள்ளைகளும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை இரவு கொட்டாஞ்சேனை பகுதியில் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாதா என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மித்தெனிய பகுதியில் 'கஜ்ஜா' என்றழைக்கப்படும் அருண விதானகே மீதும் அவரது இரண்டு பிள்ளைகள் மீதும் துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் மூவரும் உயிரிழந்துள்ளனர். இரண்டு சிறுபிள்ளைகளின் இறப்புக்கு வருத்தமடைகின்றேன். தந்தையின் தவறினால் பிள்ளைகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அருண விதான என்பவர் 2022 காலப் பகுதியில் போராட்டத்தின் போது போராட்டக்காரர்களுக்கு எதிராகச் செயற்பட்டார். மெதமுல்ல பகுதியில் டி.ஏ.ராஜபக்ஷவின் உருவச்சிலையை உடைத்து போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது இவர் ரி – 57 ரக துப்பாக்கியுடன் அந்தப் பகுதிக்கு வந்து துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டார்.

இதனால் இருவர் பலியானதுடன், இருவர் காயமடைந்தனர். இருப்பினும் அவருக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

இந்த நபர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ராஜபக்ஷ குடும்பத்துக்கும் சார்பாகவே செயற்பட்டார். அவர்களுக்காகவே அரசியல் செய்தார். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ராஜபக்ஷக்களிடம் இருந்து விலகி பிறிதொரு அரசியல் கட்சிக்குச் சென்றார். பின்னர் ராஜபக்ஷக்களுக்கு எதிராகச் செயற்பட்டார்.

ராஜபக்ஷக்கள் தொடர்பான இரகசியங்கள் வெளிவரும் என்ற அச்சத்தில் இவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று மக்கள் மத்தியில் பேசப்படுகின்றது. ஆகவே, கஜ்ஜாவின் கொலையில் மர்மம் உள்ளது. இந்த விவகாரத்தை அரசு முறையாக விசாரணை செய்ய வேண்டும்." – என்றார்.

---

## தமிழருக்கான தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்த கலந்துரையாடலுக்குக் கடிதம் மூலம் அழைப்பு விடுத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பிக்குப் பதிலளித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கடிதமொன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

அந்தக் கடிதத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தற்போதைய அரசு மெத்தனப்போக்கைக் கடைப்பிடிப்பதாலும், அதற்கான முன்வரைவு எதனையும் சமர்ப்பிக்காத நிலையிலும் நாம் அரசமைப்பு வரைவு பற்றி இப்போது விவாதிப்பது பொருத்தமானதாக இருக்கும் எனக் கருதவில்லை என்றும், உரிய நேரம் வரும்போது இது பற்றிக் கலந்துரையாடலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், புதிய அரசமைப்பு உருவாக்க விவகாரத்தில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயலாற்றுவது குறித்து ஆரம்பத்திலிருந்தே முனைப்பைக் காண்பித்து வந்த தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரனிடம் அவரது நிலைப்பாடு தொடர்பில் வினவியபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

"தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கத்தைப் பொறுத்தமட்டில், அரசு எமக்கான தீர்வுத் திட்டத்தைத் தரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மாறாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து, தமிழர்கள் சார்ந்து ஒரு கூட்டு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இப்போது நாங்கள்தான் பசியுடன் இருக்கின்றோம்.

பசியுடன் இருப்பவர்கள்தானே என்ன தேவை என்று கேட்க முடியும்? உணவை வைத்திருப்பவன், பசியுடன் இருப்பவனைப் பார்த்து உனக்கு என்ன உணவு வேண்டும் என்று கேட்கப் போவதில்லை. எனவே, எம்முடைய பசிக்குரிய உணவு எதுவென்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்.

சுமார் 80 வருடங்களாகத் தமிழர்களாகிய நாம் உரிமைப் பசியுடன் வாழ்கின்றோம். அந்த உரிமைப் பசிக்காக நாம் செய்த தியாகங்கள் அளப்பரியவை. அதற்காக ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்திருக்கின்றோம். எனவே, எம்முடைய உரிமைப் போராட்டமும், தமிழர் அரசியலும் உரிமைக்காகப் போராடி மாண்ட உயிர்களின் மீதும், சாம்பல் மேட்டின் மீதும்தான் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது.

ஆகவே, இற்றை வரை உரிமைகளுக்காகப் போராடி வரும் தமிழினத்தின் தேவை மற்றும் கோரிக்கை என்னவென்பதை நாங்கள்தான் வெளிப்படையாகக் கூறவேண்டும். மாறாக அரசு கூறும் வரை நாங்கள் காத்திருக்க முடியாது. இந்த விடயத்தில் நாம் (தமிழரசுக் கட்சி) மாத்திரமன்றி, தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சகல கட்சிகளும் இணைந்து ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்." – என்றார் சிறீதரன் எம்.பி.

# நாட்டில் பல பகுதிகளில் நாளை முதல் மழை



நாளை முதல் வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பெரும்பாலும் வறண்ட வானிலை நிலவும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# வேட்புமனு தாக்கலின் பின்னரே தேர்தலுக்கான திகதியை அறிவிக்க முடியும்: சமன் ஸ்ரீரத்நாயக்க



வேட்புமனு தாக்கல் முடிந்த பின்னரே உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதியை அறிவிக்க முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாறை பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தின் பிரகாரம், 14 நாள்கள் கட்டுப்பணம் செலுத்துவதற்கு ஒதுக்கப்படும்.

பின்னர், கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால அவகாசம் நிறைவடைந்த பின்னர் மூன்றரை நாள்கள், அதாவது 17 ஆம் நாள் நண்பகல் வரை மூன்றரை நாள்கள் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான நாளாக ஒதுக்கப்படும்.

இந்த மூன்றரை நாள்களில் ஒருநாளேனும் அரச விடுமுறை அல்லாத வாரமொன்றில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எவ்வாறாயினும், வேட்புமனு தாக்கல் முடிவடைந்த பின்னரே உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும்.” என்றார்.

# அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இருவர் விடுதலை

டபிள்யூ.எம்.மெண்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரியை செலுத்தாமல் 3.5 மில்லியன் ரூபா பெறுமதியான பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் அர்ஜுன் அலோசியஸ் உட்பட இருவர் கடந்த ஒக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், நீதிமன்றம் வழங்கிய 06 மாத கால சிறைத்தண்டனை முடிவடைந்த பின்னர் இருவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது அபத்த முயற்சி

‘மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடும் விதமாக’ கருத்துக்களை வெளியிடுகின்றது அரசுத் தரப்பு.

நாட்டில் வெடித்திருக்கும் துப்பாக்கிச் சூட்டுக் கொலைக் கலாசார பதற்றத்துக்கு மத்தியில் ‘குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயலும்’ அபத்தத்தை அது அப்பட்டமாக முன்னெடுக்கின்றது.

பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளினால் மோதல்கள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், படுகொலைகள் தினசரி செய்திகளாகி விட்டன.

அந்தப் பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாத பாதுகாப்புத் தரப்பு, அதற்கு வேறு வியாக்கியானம் கூறி, மக்களை முட்டாளாக்கப் பார்ப்பது போக்கிரித்தனமான செயலாகும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளை திசைதிருப்பும் நோக்கில் பல்வேறு முயற்சிகள் பாதாள உலகம் குழுக்கள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டி. டபிள்யு ஆர்.பி. செனிவிரத்னவின் பகிரங்கக் கருத்து வெளிப்பாடு மக்கள் காதில் பூச்சூற்றும் வேலைதான் என்பது வெளிப்படையானது.

திட்டமிட்டுக் குற்றங்களைப் புரியும் பாதாள உலகக் குழுக்களுக்கு இடையில் பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டு, அவை சூட்டு சம்பவங்களாக வெடித்துள்ளன என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

இந்த முரண்பாடுகளுக்குப் பல காரணங்கள், காரியங்கள் உண்டு. சில சமயங்களில் அவற்றுக்கு அரசியல் தொடர்புகளும் இருக்கலாம்.

ஆனால், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளைத் திசை திருப்பும் நோக்கத்திலேயே பாதாள உலகக் குழுக்கள் இவ்வாறு தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கின்றன என்ற பாணியில் கருத்து கூற முற்படுவது குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் வேலையன்றி வேறில்லை.

அது மாத்திரமல்ல, பாதாள உலகக் குழுக்களின் மோதல்கள், தாக்குதல்கள் தீவிரமடைந்திருப்பதை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகளுடன் தொடர்புபடுத்தி அதனை திசை திருப்பும் செயற்பாடு என அரசு தரப்பு காட்ட முற்படுவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடும் விவகாரமும் கூட.

முன்னைய அரசில் சரியோ, பிழையோ பதில் பொலிஸ்மா அதிபராக இருந்த தேசபந்து தென்னக்கோன்பாதாளஉலகக்குழுவினருக்கு எதிராக யுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி, தீவிர தொடர் நடவடிக்கைகளை எடுத்து, அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார் என்பதும், புதிய அரசு வந்த பின்னர் திட்டமிட்ட குற்றங்களை இழைக்கும் பாதாள உலகக் குழுவினரின் நடவடிக்கைகள் தீவிரமடைந்திருக்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

அவற்றை ஏற்றுக் கொள்வதற்கு பதிலாக, தவறான திசை திருப்பல்களுக்கு மக்களையும் நாட்டையும் இந்த ஆட்சியாளர்கள் கொண்டு செல்ல முயல்வது அபத்தமாகும்.

# செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்: நீதிமன்றத்தின் கரிசனைக்கு வரவேற்பு

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



யாழ். செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் மனித எலும்பு எச்சங்கள் தென்பட்டுள்ள நிலையில், அந்த விடயத்தில் யாழ்ப்பாணம் நீதிமன்றம் கவனம் செலுத்தியிருப்பது வரவேற்கத்தக்க விடயம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அந்த இடத்துக்குச் சென்று நாங்கள் நேரில் பார்வையிட்டிருந்தோம். அங்கு காணப்பட்ட மனித எலுப்பு எச்சங்கள் எங்கிருந்தோ கொண்டு வந்து புதைக்கப்பட்டவை போன்று தென்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிமன்றம் இந்த விடயத்தில் கவனம் செலுத்தியிருப்பது நம்பிக்கையளிக்கின்றது. தேவை ஏற்படின் சர்வதேச தரப்பிலான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தப் புதைகுழி போர் நடைபெற்ற காலப்பகுதியில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்களின் எலும்பு எச்சங்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம். ஆகையால் இந்தப் புதைகுழி தொடர்பாக நீதியான நம்பகத்தன்மையான விசாரணைகளை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று தற்போதைய அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம்." - என்றார்.

# தையிட்டியில் தனியார் காணியில் பௌத்த விகாரை: உடனடியாக அகற்றக் கோரி இலண்டனில் போராட்டம்




இலங்கை இராணுவத்தினரால் தமிழரின் பூர்வீக நிலத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள புத்த விகாரையை நீக்கக் கோரி பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதரகம் முன்பாக மாபெரும் போராட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

தமிழர் தாயக நிலப்பரப்பான யாழ்ப்பாணம் - தையிட்டியில் தனியாருக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தாயகத்தில் மக்களால் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான போராட்டங்களுக்குத் தார்மீக ஆதரவை உலக நாடுகளுக்குத் தெரிவிக்கும் வகையில் இந்த மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

இதனை 'தமிழீழ சுயநிர்ணய அமைப்பு' ஏற்பாடு செய்திருந்தது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போதும் தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரைக்குத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இந்த விகாரை உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக உள்ளது.

இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக பிரித்தானியாவில் இந்தப் போராட்டம் நடைபெற்றதுடன், சர்வதேச நாடுகள் ஈழத் தமிழர்களுக்கான நீதிக்கான போராட்டத்தை திறந்த மனதுடன், பார்க்க வேண்டும் என்றும் போராட்டத்தில் கலந்துகொண்ட ஈழத் தமிழர்களும், உலகத் தமிழர்களும் வலியுறுத்தினர்.







# நீதித்துறையின் எதிர்காலமும் நிர்க்கதியில் நிற்கும் அரசும்!



வி.எஸ்.சிவகரன்

சாமானியனின் கடைசி நம்பிக்கை நீதிமன்றமே. ஒரு நாட்டிலே நீதித்துறை தனது சுயாதீனத் தன்மையை இழக்கின்ற போது அந்த நாடு நிர்வாகத் துறையிலே வலுவிழந்ததாகவே காணப்படும். சமத்துவம், சமூக சமநீதி எனும் படிநிலைகளை விருப்பு, வெறுப்புக் கடந்து, நியதி நிர்ணய நிலை இன்றி, தத்துவார்த்தம் கடந்து, பாதிக்கப்பட்டவன் பக்கம் நிற்பதே அறத்தின் நீதியாகும்.

அந்த நீதி நிழலாட முடியாத, நிர்ப்பந்தமடைய இயலாத, வலுவேறாக்கல் தன்மைக்குட்படாத எதைக் கண்டும் வளையாத, நெளியாத, சார்பற்ற திரவத்தன்மையற்ற, நிமிர்ந்து நிலைத்து நிற்கக்கூடிய வலிமையானதே ஜனநாயக நீதிக்கோட்பாடு. அந்த நீதிக் கோட்பாடு உலகம் முழுவதும் இருக்கின்றதா என்கின்ற கேள்வி எழுகிறது.

தனித்துவம், சுயாதீனம், நடுநிலைமை, பக்கச்சார்பின்மை போன்ற சொற்கள் போலியானவை. அப்படி இந்த உலகத்தில் எங்கும் இல்லை. ஏதோ ஒன்று இன்னொன்றில் சார்ந்து இருக்கிறது. அது இயற்கையின் நியதி. நீதியும் அதற்கு விதிவிலக்கல்ல.

ஆட்சி மாறுகின்ற போது நீதித்துறையின் போக்கும் மாறித்தான் காணப்படுகிறது. உலகளாவிய ரீதியில் நீதியின் நிழலாட்டத்திற்கு பல சந்தர்ப்பங்களில் சட்டத்தரணிகளும் காரணம். உண்மையைப் பொய் ஆக்குவதும், பொய்யை உண்மையாகவதும்தான் அவர்களுடைய வேலையாக இருக்கிறது.

அறம் இல்லாமல் – தனது கட்சிக்காரர் வெற்றி பெற வேண்டும் என்கின்ற ஒரே நோக்கத்திற்காக – சத்தியத்துக்கு சாவுமணி அடிக்கும் வேலையை சட்டத்தரணிகள் செய்வது உண்டு.

‘ஒரு கொலையாளி ஒருவர் மகாத்மா காந்தியிடம் சென்றாராம். தான் ஒருவரை கொலை செய்துவிட்டேன், நீதிமன்றத்தில் இருந்து தன்னைக் காப்பாற்றி விடுமாறு காந்தியிடம் கூறினாராம். ‘நீ போய் பொலீஸ் நிலையத்தில் சரணடைய வேண்டும்.’ என்றார் காந்தி.

‘இல்லை... நான் எவ்வளவு பணம் வேண்டும் என்றாலும் தருகிறேன். என்னை காப்பாற்றுங்கள்’ – என்றவரை காந்தி முடியாது என கூறிவிட்டார்.

வேறு ஒரு சட்டத்தரணி மூலம் அவர் நீதிமன்றத்திற்குச் சென்று வெளியே வந்து விட்டார். வந்ததும் முதல் வேலையாக காந்தியை சந்திக்க சென்றிருக்கிறார்.

‘நான் வெளியில் வந்து விட்டேன் பார்த்தியே. நீ எல்லாம் ஒரு சட்டத்தரணியா?’ எனக் கேட்டிருக்கிறார். அப்போது காந்தி ‘நீ இப்பொழுது இரண்டு கொலை செய்துவிட்டாய். ஒன்று ஏலவே செய்த கொலை. இன்னொன்று நீதியையும் கொலை செய்து விட்டாய்!’ என்று கூறினாராம்.

‘பணம் கொடுத்தேன் எல்லாம் சரியாகிவிட்டது’ என்றான் கொலை செய்தவன்.

ஆனால், தற்போது காந்தியின் சிந்தனைத்துவத்தில் யாராவது சட்டத்தரணிகள் இருக்கிறார்களா? சட்ட அறிவு இல்லாத சாமானிய மக்களை ஏமாற்றி பணம் பறிக்கிறார்கள்.

பொய்யே பேசக்கூடாது என சத்தியம் செய்கின்ற இடத்தில் அதிகமான பொய் பேசப்படுகிறது. பல சந்தர்ப்பங்களில் நீதி நித்திரை கொள்கிறது. உலகம் முழுவதும் இந்த படி முறைகள் எழுதப்படாத மரபாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பொதுவெளியில் கேள்விக்கு உட்படுத்தினால் நீதிமன்ற அவமதிப்பு ஏற்பட்டு விடும் என எல்லோரும் அஞ்சுகின்றனர். ஆனால் இது பற்றி மீள்வாசிப்பு யாரும் செய்வதில்லை. ஆனால் உலகளாவிய ரீதியில் நீதித்துறையை பற்றிய மீளாய்வும் மறுசீரமைப்பும் அவசியம்.

இந்த நாட்டிலே சட்டம் – ஒழுங்கு சந்தி சிரிக்கும் அளவில்தான் காணப்படுகிறது. ஏலவே ஆட்சியில் இருந்தவர்களை பல்வேறு விதமான விமர்சனத்துக்கு உட்படுத்திய ஜே.வி.பியினர் தாங்களும் அதையே நடைமுறைப் படுத்தி வருகிறார்கள். நாட்டிலே மிகவும் பாதுகாப்பான – நம்பிக்கைக்குரிய – மரியாதைக்குரிய – இடமாக இருக்கக்கூடிய நீதிமன்றங்களுக்கு கூட சுதந்திரமாக போகக்கூடிய அளவுக்கு பாதுகாப்பு இன்மை என்பது இந்த நாட்டில் இருக்கின்ற கடைக்கோடி மனிதனின் சுயாதீன வாழ்வுரிமையைக் கேள்விக்கு உட்படுகிறது.

எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், எவரையும் படுகொலை செய்யலாம் என்பதற்கு அண்மையில் நடைபெறுகின்ற சூட்டுச்

தொடர்ச்சி▼

# நீதித்துறையின் எதிர்காலமும் நிர்க்கதியில் நிற்கும் அரசும்!

**தொடர்ச்சி▲**

சம்பவங்கள் சான்று பகிர்கின்றன. நீதிமன்றத்திற்கு முன்னாலும் நீதிமன்றத்திற்குள்ளும் நடைபெற்ற சம்பவங்கள் சட்ட ஆட்சிக் கட்டமைப்பை ஆட்டம் காண வைத்திருக்கின்றன. சமூக சீர்திருத்தம் கூட பேசமுடியாத அளவில் உயிரச்சம் ஏற்பட்டுள்ளது. இது இலகுவாகக் கடந்துபோகக் கூடிய விடயமல்ல.

அதுவும் இந்தச் சம்பவங்களின் பின்னணியிலே சேவையில் உள்ள இராணுவத்தினரும் சேவையை விட்டு விலகிய இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதாள குழுவோடு இணைந்து இவ்விதமான குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்பது மக்கள் மத்தியிலே வெறுப்பையும் அச்சத்தையும் அவநம்பிக்கையும் அரசு இயந்திரத்தின் மீதான நம்பிக்கையீனத்தையும் வெளிப்படுத்துகின்றது.

பொருளாதாரத்தில் வலுக் குன்றிய சந்தர்ப்பத்திலும் கூட இராணுவப் பிரசன்னத்தில் எந்த விதமான தளர்வுமின்றி தொடர்ந்து இராணுவத்தை அதிகரித்து வரும் இலங்கை அரசுக்கு பெரும் சவாலாகவே இராணுவம் மாறிவிட்டது.

வீட்டுக்கு ஒருவர் கடந்து இருவர் இணையுங்கள் என வீடு வீடாகப் பிரச்சாரம் செய்து இராணுவத்தில் இணைத்த பெரும்பணியை 2005 இல் தொடங்கியது இன்றைய ஆட்சியில் இருக்கும் ஜேவிபியே. அதில் பிரதான பங்கு வகித்தவர் அநுரகுமார திஸ்ஸநாயக்க. மஹிந்தரோடு கூடிக் குலாவி, உறவு பகிர்ந்து, இனவாதத்தைக் கக்கி, தெற்கின் கோர முகத்தை வடக்கு கிழக்கு மீது திணித்து, தமிழ் மக்களை இனப்படுகொலைக்கு உள்ளாக்கி, கொன்று குவிக்கஒ பயன்படுத்திய இராணுவம் இன்று பாதாள குழுக்களோடு இணைந்து அரசுக்கு சவால் விடும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அதிலும் மன்னார் சூட்டுச் சம்பவத்தோடு தொடர்புடைய பிரதான சூத்திரதாரி எனக் கூறப்படும் இராணுவப் புலனாய்வாளர் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக மன்னாரிலே பணியாற்றினார். இங்கு உள்ளவர்களோடு மிகவும் சகஜமான உறவைப் பேணி வந்தவர். நன்றாக தமிழ் பேசக் கூடியவர். இப்படி எத்தனை பேர் இன்னும் நாடு முழுவதும் செயல்படப் போகிறார்களோ தெரியவில்லை. இராணுவத்தின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த ஜேவிபிக்கு பெரும் திண்டாட்டமாகத்தான் உள்ளது. வினையை விதைத்தவர்கள்தானே அதை அனுபவித்து ஆக வேண்டும்...?

இந்த அடிப்படை வாத சம்பவங்கள் எல்லாம் இலகுவாக கடந்து போய்விடக் கூடியவை அல்ல. மக்கள் மத்தியில் அரசாங்கம் மீதான அச்சத்தையும் அவநம்பிக்கையும் ஏற்படுத்தப் போகின்றன. நீதிமன்றத்தின் நியாயாதிக்க தன்மை கேள்விக்குட்படுகிற போது நாட்டு மக்கள் முழுவதுமே அச்சமடைய கூடிய மனோநிலை ஏற்படும். இந்த நிலை அரசின் மீதான கூட்டுக் கோபத்திற்கு வழி வகுக்கலாம். உள்ளூராட்சித் தேர்தல் நெருங்குகின்ற சந்தர்ப்பத்தில் நாடு முழுவதும் ஏற்படுத்தியுள்ள அச்சமான மனோநிலை அரசின் நிர்வாக இயலை சங்கடத்துக்கு உள்ளாக்கப் போகிறது.

இதன் பின்னணியில் இருப்பவர்கள் அரசுக்கு எதிரானவர்களா அல்லது அயல்நாட்டு அனுசரணையோடு தான் இவ்விதமான சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றனவா என்கின்ற வகையிலும் அரசு சிந்திப்பதாகவும் தகவல் உண்டு.

இதைத் துரிதமாகக் கட்டுப்படுத்தி நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் அரசாங்கம் செயல்படுவதாகவும் இல்லை. ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களை கடந்துவிட்ட போதும் கூட ஒரு அசமந்தப் போக்கான நிர்வாகமே நடைபெற்று வருகிறது. அதிலும் குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியினுடைய நீட்சியாகவே இது காணப்படுகிறது. அதனால் மிகுந்த எதிர்பார்ப்போடு வாக்களித்த மக்களுக்கு ஏமாற்றமான மனோநிலையே காணப்படுகிறது.

அனுபவம் இல்லாதவர்கள் ஆட்சி பீடம் ஏறி உள்ளார்கள். அவர்கள் நாட்டை திறம்பட நிர்வகிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள் என்பதே பலரது விமர்சனமாக உள்ளது. பல்வேறு விதமான சீர்திருத்தங்களை செயல்படுத்த போகிறோம், ஆயிரக்கணக்கான ஊழல் பைல்கள் எம்மிடம் உண்டு என தேர்தல் நேரத்திலே மேடைகளிலே பேசி வந்தார்கள். முறையற்ற மதுபான அனுமதிப்பத்திரம் உட்பட எந்த விடயத்தையும் வெளியில் கொண்டு வர முடியவில்லை. நாளாந்த நிர்வாக இயலில் கூட பல்வேறு விதமான தாமதங்கள் காணப்படுகின்றன. எந்த விடயத்துக்கும் விரைவாக பதில் கிடைப்பது இல்லை. பல நாள்கள் காத்திருக்க வேண்டி இருக்கின்றது என அரச உயர் அதிகாரிகள் விசனப்படுகின்றனர் தென்னிலங்கையில் மட்டுமல்ல வடகிழக்கிலும் ஜே.வி.பியினரையும் அநுரகுமார திஸநாயக்காவையும் மீட்பர்கள் போல் வர்ணித்து கொண்டவர்களின் நிலை பரிதாபத்துக்குரியதே.

நாட்டிலே அத்தியாவசியப் பொருள்களின் விலையில் கூட சீரின்மை நிலவுகின்றது. நெல் கொள்வனவு விடயம் விவசாயிகளை மிகவும் பாதிக்கின்றது. மில் முதலாளிகளையே ஊக்குவிக்கும் வகையில் காணப்படுகிறது.

அரிசி தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கப் போகிறது. இந்த ஆண்டு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் உப்பு, தேங்காய் என சாமானிய மக்களின் அத்தியாவசிய தேவைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவப்போகிறது. இந்தச் சூழலில் சட்டம் – ஒழுங்கும் சீர்கெட்டு இருப்பதனால் நாட்டில் உள்ள எல்லா வகுப்பினரதும் ஒட்டுமொத்த வெறுப்புக்கு அரசு உள்ளாகப் போகிறது. இதனைத் தடுத்து சாமானிய மக்களுக்கு அச்சமற்ற மனோநிலையை ஏற்படுத்த வேண்டிய தார்மீக கடமையும் பொறுப்பும் அரசுக்கு உண்டு. அதனை அரசு சரிவர செய்யாவிட்டால் விரைவில் மக்கள் வீதிக்கு இறங்கும் நிர்ப்பந்தம் ஏற்படலாம். அதனை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளக்கூடிய மனநிலையில் இருப்பவர்களாகத் தெரியவில்லை. மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற அசுர பலத்தோடு இருக்கின்றோம் என்கின்ற மமதையோடுதான் எதிர்க்கட்சிகளை அடக்கியாள முயற்சிக்கிறார்களே தவிர, சிறந்த நிர்வாகத்தை வழங்குவது பற்றி அவர்கள் கிஞ்சித்தும் சிந்திப்பவர்களாகத் தெரியவில்லை. அவர்களைத் தீவிரமாக ஆதரித்தவர்களே வெளிப்படையாக விமர்சிக்கும் நிலை ஏற்படுகிறது. ஆனாலும் இந்தச் சட்ட – ஒழுங்கு சீர்கேட்டுக்கு பின்னணியில் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது என்பதனை அரசு விரைவில் கண்டுபிடிக்க வேண்டும் இல்லையேல் கோட்டாவின் நிலைதான் இந்த அரசுக்கும் ஏற்படலாம்!



# வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தினம் பகலில் மாத்திரம் பூஜைகள் செய்ய ஏற்பாடு

## விவரங்களைப் பெற்ற நெடுங்கேணிப் பொலிஸார்

(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி தினம் தொடர்பாக ஆலய பூசாரியார் மதிமுகராசா மற்றும் முக்கியஸ்தரான பூபாலசிங்கம் ஆகியோர் நெடுங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு விவரங்கள் பெறப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகள் தொல்பொருள்திணைக்களத்திற்கு கீழ் உள்ளன எனத் தெரிவித்து, அந்த திணைக்களம் மற்றும் நெடுங்கேணி பொலிஸாரால் பொதுமக்கள் வழிபாடுகளை மேற்கோள்வதற்கு பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடந்த வருடம் சிவாரத்திரி தினமன்று மாலை 6 மணிக்கு பின்னர் சிவராத்திரி பூஜைகளை செய்ய முற்பட்ட 8 பேர் நெடுங்கேணி பொலிஸாரால் அடாவடியான முறையில் கைது செய்யப்பட்டனர். இது தமிழ் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியதுடன், பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களும் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் அது தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கைது செய்யப்பட்ட 8 பேரையும் வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்த நீதிபதி பொலிஸாரால்தாக்கல்செய்யப்பட்டவழக்கினையும் தள்ளுபடி செய்திருந்தார்.

இந்நிலையில் இம்முறை சிவராத்திரி தினம் தொடர்பாக ஆலயத்தின் பூசாரியார் மற்றும் முக்கியஸ்தர் ஒருவர் நெடுங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு அவர்களிடம் விபரங்கள் பெறப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஆலயத்தின் பூசகர் மதிமுகராசாவிடம் கேட்டபோது, இம்முறை சிவராத்திரி விரத பூஜைகளை காலை முதல் மாலை 6 மணி வரை முன்னெடுப்பதற்கு தாங்கள் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவித்தார். 6 மணியின் பின்னர் பிறிதொரு பகுதியில் சிவனுக்கான இரவு அனுஷ்டானங்களை செய்வதற்கும் ஏற்ப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிவராத்திரி தினம் வெடுக்குநாறி மலையில் சிறப்பாக இடம்பெறும் என அவர் தெரிவித்தார்.

# கொட்டாஞ்சேனையில் சுட்டுக் கொல்லப்பட்டவர் முன்னதாக எந்த குற்றங்களையும் செய்யவில்லை

கொட்டாஞ்சேனை கல்பொத்த சந்தி பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் சுட்டுக் கொல்லப்பட்ட நபர், முன்னதாக எந்தவொரு குற்றப்பதிவுகளையும் கொண்டிராதவர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

கொட்டாஞ்சேனை பகுதியிலுள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் வைத்து சஷி குமார் என்ற 37 வயதுடைய நபர் உந்துருளில் வந்த இரண்டு சந்தேகநபர்களால் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டின் பின்னர், சந்தேக நபர்கள் தப்பிச் சென்றிருந்தனர்.

எனினும், தப்பிச் சென்ற இருவரையும் கிரேண்ட்பாஸ் பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடம் முன்னெடுத்த விசாரணையில் மோதர நிபுண என்ற குற்றக் கும்பல் உறுப்பினரின் அறிவுறுத்தலின்



பேரில் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில், பின்னர் மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் மட்டக்குளி – காக்கைத்தீவு பகுதிக்கு, மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் காண்பிப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்ட போது, பொலிஸாரின் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயன்றுள்ளனர்.

அதன்போது, பொலிஸார் நடத்திய பதில் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு சந்தேக நபர்களும் கொல்லப்பட்டனர் எனவும் உயிரிழந்த இருவரும் பிலியந்தலை மற்றும் முகத்துவாரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனை பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபர் 2015 ஆம் ஆண்டு இராணுவத்திலிருந்து விலகியவர் என தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவரும் காயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# வடக்கு மீனவர்களை வாழவிடும்படி கோரி
# ரவிகரன் எம்.பி. ஒத்திவைப்பு பிரரேணை!

**(விஜயரத்தினம் சரவணன்)**

வடபகுதிக் கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைத் தடுத்து, மீனவ மக்களை நிம்மதியாக வாழவிடுமாறு கோரி வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனினால் நேற்று நாடாளுமன்றில் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை ஒன்று முன்மொழியப்பட்டது.

இந்த சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் வழிமொழிந்து கருத்துத்தெரிவித்தார். ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ரொசான் அக்மிமென, ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி ஆகியோரும் இப்பிரேரணையௌ முன்வைத்தமைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு நன்றி தெரிவித்து ஆதரவாக கருத்துத் வெளியிட்டனர்.

இந்தப் பிரேரணையை சபையில் முன்வைத்தமைக்கு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு நன்றி தெரிவித்தமையுடன், வடபகுதியில் இடம்பெறும் இத்தகைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பதிலளித்தார்.

மேற்படி சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

கடற்றொழிலில் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளை சட்டவிரோதிகள் செய்து வருகின்றமையால் உண்மையான மீனவர்கள், மீனவக் குடும்பத்தினர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுகின்றார்கள். அரசாங்கம் தடைசெய்யப்பட்ட சட்டவிரோத தொழில்களை உடனடியாக நிறுத்தி மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவ வேண்டும்.

வடக்கு கடல் இப்போது சட்டவிரோதிகளின் ஆளுகையில் காணப்படுகின்றது.

சுருக்குவலை, வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், டைனமற் வெடிவைத்து மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத தொழில்களால் வடக்கு கடல் நிரம்பி உள்ளது. சட்டத்துக்கு புறம்பான வகையில் சட்டவிரோதிகளின் ஆட்சி வடக்கு கடலிலே நடக்கின்றது. அமைச்சர் அவர்களே உங்களுடைய ஆட்சி வடக்கு கடலிலே இல்லை.

வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மீனவர்கள், மீனவக்குடும்பங்கள் அதிகமாக உள்ளனர். மீன்பிடியாளர்களைத் தவிர பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இத்தொழிலை நம்பி வாழ்கின்றார்கள். 10,500 இற்கும் மேற்பட்ட பெண் தலைமைக்குடும்பங்கள் கூட இதனை நம்பி வாழ்கின்றன.

முன்பு இப்படி சட்டவிரோத தொழில்கள் இல்லை. மீனவ சமூகம் மிகவும் செழிப்பாக இருந்தார்கள். இப்போது மீனவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியே. முன்னைய ஆட்சியாளர்கள் சட்டவிரோதிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தாமையால் இப்போது அவை விரிவடைந்து கடல்முழுவதும் சட்டவிரோதிகளின் கூடாரமாக மாறிவிட்டது.

இதனைத் தடுக்கவேண்டியவர்களான கடற்றொழில்திணைக்களங்கள், கடற்படையினர், பொலிஸார் கையாலாகாதவர்களாக காணப்படுகின்றார்கள். இடைக்கிடை சிலரைக் கைதுசெய்கின்றார்கள். ஆனால் சட்டம் ஒழுங்கு கடற்பகுதிகளைப் பொறுத்தவரையில் காப்பாற்றப்படவில்லை.

மீனவ மக்களில் பலர் இந்த தொழிலை விட்டுவிடலாமோ என்று எண்ணுமளவுக்கு நிலமை மோசமாகின்றது. நாட்டின் கடல்பகுதியில், கணிசமான பகுதி வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ளது. இதனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. இதனை நீங்கள் கட்டுப்படுத்தாவிட்டால் மீன்இனத்தின் உற்பத்தி குறைந்து மீன் இனம் அழிக்கப்படும். மீன்வங்கி என்று சொல்லப்படும் வடபகுதிக் கடலில் மீன்கள் அற்றநிலை உருவாகலாம்.

இதனைச், சட்ட விரோதிகளின் செயற்பாடுகளை நீங்கள் தடுப்பீர்களா? இல்லையா? என்பதை வடக்கு மீனவர்களுக்கு சொல்லவேண்டும். சட்டம், ஒழுங்கை இந்த விடயத்தில் காப்பாற்றுவீர்களா? என்று எமது மீனவ சமுதாயத்திற்கு கடற்றொழில் அமைச்சரே நீங்கள் சொல்லவேண்டும்.

எமது கடற்பகுதியில் சட்டவிரோதிகளின் ஆதிக்கங்கள் கூடிவிட்டது. இந்த நிலமைகளைத் தடுக்கவேண்டும். சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்படவேண்டும் என அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது கடற்பரப்பில் இடம்பெறும் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்கும் விடயத்திற்கு எமது மீனவர்கள் பூரணஒத்துழைப்பையும் ஆதரவினையும் தருவார்கள். தயவு செய்து மீனவசமூகத்தினை வாழவிடுங்கள் என்றுதான் கேட்கின்றேன் – என்றார்.





# பீகார் மாநிலத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் மாணவன் உயிரிழப்பு

பீகார் மாநிலம் ரோஹ்தாஸ் மாவட்டத்தின் சசாரம் பகுதியில் இரு குழுக்களிடையே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மோதலின்போது மாணவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

இந்த வன்முறையில் மேலும் இரு மாணவர்கள் காயமடைந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பரீட்சை நிலையத்தில் மோசடி செய்ய அனுமதி மறுக்கப்பட்டதால் மாணவர்கள் மோதலில் ஈடுபட்டதால் தகராறு ஏற்பட்டது.

மோதல் வன்முறையாக மாறியதால், அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 16 வயது அமித் குமார் என்ற தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவர் உயிரழந்துள்ளார்.

PTI செய்திச் சேவையின் தகவல்களுக்கு அமைவாக, பரீட்சை நிலையத்தில் இடம்பெற்ற மோசடி சம்பவம் தொடர்பாக மாணவர்கள் குழுக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மாணவரின் மரணம் காரணமாக, இறந்தவரின் குடும்பத்தினர் மற்றும் கிராம மக்கள் நீதி கேட்டு தேஹ்ரியில் தேசிய நெடுஞ்சாலையை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், அதிகாரிகள் தலையிட்டு, இந்த வழக்கில் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

இறுதியில் போராட்டக்காரர்கள் சமாதானம் செய்யப்பட்டு, குடும்பத்தினர் இறுதிச் சடங்குகளில் ஈடுபட்டனர்.








# அனைத்துத் துறைகளிலும் சிறந்த தலைமை தேவை

## பிரதமர் நரேந்திர மோடி அறிவுரை

வளர்ந்த பாரதத்தை உருவாக்க நாட்டின் அனைத்து துறைகளிலும் சிறந்த தலைமை தேவை என்று பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் மோடியின் வழிகாட்டுதலின்படி குஜராத் தலைநகர் காந்திநகரில் 22 ஏக்கர் பரப்பளவில், தலைமைப் பண்பு பள்ளி (சோல்) கட்டப்பட்டு வருகிறது.

இந்த சூழலில் தலைமைப் பண்பு பள்ளி சார்பில் நடைபெறும் 2 நாள் சிறப்பு மாநாடு டில்லியில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் அரசியல், வணிகம், விளையாட்டு, ஊடகம், ஆன்மிகம், சமுக சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த நிபுணர்கள் பங்கேற்றுள்ளனர். முதல் நாள் மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார். அப்போது அவர் உரையாற்றுகையில்,

"ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு இயற்கை வளங்கள் மட்டுமன்றி, மனித வளமும் அவசியம். குறிப்பாக புதுமை கண்டு பிடிப்புகளை ஊக்குவிக்க வேண்டும். அனைத்து துறைகளிலும் இளைஞர்களுக்கு திறன்சார் பயிற்சி அளிக்க வேண்டும். உலக நாடுகளோடு போட்டியிட இந்திய இளைஞர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். காலம், சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு எடுக்க வேண்டும். இக்கட்டான சூழல்களில் தெளிவான முடிவுகளை தேர்ந்தெடுக்க வேண்டும். உலக சந்தை நிலவரத்தை ஏற்ப பாரதத்தின் வணிகத்தை கட்டமைக்க வேண்டும். நமது சிந்தனைகள் சர்வதேச அளவில் இருக்க வேண்டும். அதேநேரம் உள்நாட்டு மக்களின் உணர்வுகளையும் புரிந்து வைத்திருக்க வேண்டும்.

தற்போது உலகின் அதிகார மையமாக பாரதம் உருவெடுத்து வருகிறது. இந்த நேரத்தில் சர்வதேச தரம் வாய்ந்த புதிய நிறுவனங்களை நமது நாட்டில் உருவாக்க வேண்டும். குறிப்பாக தொழில்நுட்பம், விண்வெளி, உயிரி தொழில்நுட்பம், எரிசக்தி போன்ற துறைகள் தொடர்பான புதிய நிறுவனங்களை உருவாக்க வேண்டும். அந்த நிறுவனங்களை வழிநடத்த சிறந்த தலைமைகளை உருவாக்க வேண்டும்." என்றார்.

# இந்தியா முழுவதும் 60 புதிய கட்சிகள் உதயம்

## தமிழகத்தில் த.வெ.க. உள்பட 3 கட்சிகள் பதிவு



உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில், 6 தேசிய கட்சிகள், 58 மாநில கட்சிகள், 2,763 அங்கீகரிக்கப்படாத பதிவு பெற்ற கட்சிகள் இருக்கின்றன. இந்திய தேர்தல் ஆணையத்தின் 2024 மார்ச் தரவுகளின்படி இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் அங்கீகரிக்கப்படாத, பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடந்த 2024ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத நிலவரப்படி இந்தியாவில் 39 புதிய கட்சிகள் உதயமாகியுள்ளன. தமிழகத்தில் 3 கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகம், நமது உரிமை காக்கும் கட்சி, மக்கள் முரசு கட்சி ஆகிய 3 கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நமது உரிமை காக்கும் கட்சி தியாகராயநகர் முகவரியிலும், மக்கள் முரசு கட்சி கொடுங்கையூர் பகுதியில் இருந்தும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2025 ஜனவரியில் 21 கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகள் என்ற பிரிவில் அந்த கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

# ஹமாஸ் தரப்பினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 6 பணயக் கைதிகளை விடுவிக்கத் தீர்மானம்




ஹமாஸ் தரப்பினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் 6 பணயக்கைதிகள் விடுவிக்கபடவுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பணயக்கைதிகளில் நால்வர் இஸ்ரேல் மீதான தாக்குதலின் போது ஹமாஸ் துப்பாகிதாரிகளால் கைது செய்யப்பட்டவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய இருவரும் ஒரு வருடத்துக்கு முன்பாக காசாவிற்குள் நுழைந்ததிலிருந்து ஹமாஸால் தடுத்து வைக்கப்பட்டவர்கள் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு பதிலாக இஸ்ரேல் தனது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 602 பாலஸ்தீனிய கைதிகளை விடுவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



## சீனாவை அச்சுறுத்தும் புதிய வகை வைரஸ்

சீனாவில் புதிய வகை கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நச்சுயிரியல் வல்லுநரான ஷி ஷெங்லி தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஆய்வில் புதிய வகை வைரஸ் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளது.

கொவிட் 19 தொற்றினை போன்றே இந்த புதிய தொற்றும் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் அபாயம் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த புதிய வகை கொரோனா வைரஸ் ஹெச்.கே.யு.5 என அழைக்கப்படுகிறது.

இந்த வைரஸ் தொற்றும் மனிதர்களின் சுவாச மண்டலத்தைப் பாதிக்கும் தன்மை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



## அமெரிக்காவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலி

அமெரிக்காவின் கெண்டகியில் மர்மநபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

கெண்டகி மாகாணம் லுயிஸ்வெலி பகுதியில் ஓட்டுநர் உரிமம் பதிவு அலுவலகம் உள்ளது.

இந்த அலுவலகத்தின் வாகனம் நிறுத்தும் இடம் அருகே நேற்று முன்தினம் மாலை சிலர் நின்று கொண்டிருந்தனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அங்கு வந்த நபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

இதில் ஒருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 2 பெண்கள் உள்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரியவந்துள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 23.02.2025


மேஷம்

இன்றைய செயல்கள் சுமூகமாக நடக்கும். நீங்கள் உற்சாகமான மன நிலையில் காணப்படுவீர்கள். வீட்டுக்கு விருந்தினர்கள் வருகை காணப்படும். அவர்களுடன் சேர்ந்து மகிழும் வாய்ப்பு கிடைக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் இன்று பணியில் வளர்ச்சி காண்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இன்று நல்ல மன நிலையில் காணப்படுவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படுகின்றது. பாதுகாப்பான பொருளாதார நிலை காணப்படும். உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாகக் காணப்படுவீர்கள்.


ரிஷபம்

இன்று உங்களுக்கு பொறுமை அவசியம். பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று உங்கள் பணியில் திருப்தி குறைந்து காணப்படும். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்களின் ஆழமான உறவை தக்க வைத்துக்கொள்ள உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை சாதகமாக காணப்படாது. உங்களால் முடிந்த அளவுக்குப் பிறருக்குப் பண உதவி செய்வதன் மூலம் இன்றைய நாளை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

பல் வலியால் இன்று நீங்கள் அவதிபடலாம்.


மிதுனம்

இன்று சிறப்பான நாளாக அமையாது. சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் உங்கள் உணர்சிகளில் கட்டுப்பாடு இன்றி இருப்பீர்கள். பொறுமை அவசியம். உங்கள் மனதில் இருக்கும் குழப்பங்களை விலக்க வேண்டும்.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளை திறமையாக கையாள்வது கடினமாக இருக்கும்.

உங்களின் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும்.

இன்று குறைந்த அளவு பணமே சம்பாதிக்க முடியும் . பணத்தை சேமிப்பதும் கடினமாகத் தெரியும். அதிர்ஷ்டம் உங்களுக்குச் சாதகமாக இருக்காது.

இன்று வயிற்று வலி ஏற்பட வாய்ப்புள்ளது.


கடகம்

இன்று உங்கள் கொள்கைகளில் வெற்றி பெறுவதற்கு சாதகமான நாள். உங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணரும் நாள். முக்கியமான முடிவுகளை எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் செயல்திறன் மூலம் உங்கள் திறமை வெளிப்படும் நாள். நீங்கள் தொடர்ந்து முயன்று உங்கள் திறமைகளை நிரூபிக்கக் கடுமையாகப் போராட வேண்டும்.

இன்று உணர்ச்சி வசப்பட்டுக் காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தைப் பாதிக்கும்.

இன்று பண வரவு சிறப்பாக காணப்படும். பணத்தை சிறப்பாக பயன்படுத்துவீர்கள். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதற்குப் பணத்தைப் பயன்படுத்துவீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாகக் காணப்படும்.


சிம்மம்

இன்று பொறுமையாக இருக்க வேண்டும். யதார்த்தமாக இருக்க வேண்டும். உங்கள் உடன்பிறந்தவர்களால் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரும். இதனால் உங்களுக்கு வருத்தம் உண்டாகும். அவர்களை தவிர்த்தல் நல்லது.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. கடினமாக உழைத்தாலும் உங்கள் பணிக்கு அங்கீகாரமும் நற்பெயரும் கிடைக்காது.

உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாக இருக்க வேண்டும், சில சமயங்களில் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும் உங்கள் பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் நீங்கள் அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.


கன்னி

இன்று பொறுமையாக இருக்க வேண்டும். யதார்த்தமாக இருக்க வேண்டும். உங்கள் உடன்பிறந்தவர்களால் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரும். இதனால் உங்களுக்கு வருத்தம் உண்டாகும். அவர்களை தவிர்த்தல் நல்லது.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. கடினமாக உழைத்தாலும் உங்கள் பணிக்கு அங்கீகாரமும் நற்பெயரும் கிடைக்காது.

உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாக இருக்க வேண்டும், சில சமயங்களில் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும் உங்கள் பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் நீங்கள் அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.


துலாம்

இன்றைய நாள் உங்கள் இலக்குகளை அடைவதற்கு உங்களுக்கு சாதகமாக இருக்காது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.எதிர்மறை எண்ணங்களை விலக்க நீங்கள் சமயோஜித புத்தியை பயன்படுத்த வேண்டும்.

அதிக வேலை காரணமாக நீங்கள் சோர்ந்து போவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக திட்டமிட்டு ஒழுங்கமைக்க வேண்டும். நல்ல வளர்ச்சிக்கு இது வழிகாட்டும்.

நீங்கள் உங்கள் துணையிடத்தில் உணர்சிவசப்படுவீர்கள். உறவின் நல்லிணக்கத்தை இது பாதிக்கும் என்பதால் இதனை தவிர்த்தல் வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பணத்தை சிக்கனமாகக் கையாள வேண்டும். சேமிக்கும் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.


விருச்சிகம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் நற்பெயரைப் பெறுவீர்கள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிக்காட்டுவீர்கள். உங்கள் பணிக்கான நன்மதிப்பும் நற்பெயரும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பழகுவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக நீங்கள் துடிப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.02.2025




இன்று சிறப்பான நாள். சிறிய முயற்சியில் உங்கள் இலக்குகளை அடைவீர்கள். புதிய முதலீடு லாபகரமாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

பணியிடத்தில் சமூகமான நிலை காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாகச் செய்வீர்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரைவாக செய்து முடிப்பீர்கள்.

நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வதன் காரணமாக இன்று நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சிகரமாக இருப்பீர்கள்.

பணவரவு சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்தின் வளர்ச்சிக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் நிறைந்த மன நிலை காரணமாக இன்று நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும். உங்கள் நலத்தை மேம்படுத்த இது உகந்ததல்ல.

பணியிடத்தில் சிறப்பான பலன்கள் காணப்படாது. அதிகப் பணிகள் காரணமாக உங்கள் பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நட்பு முறையுடன் அணுகுவதன் மூலம் உறவில் சுமூகமான பலன்கள் கிடைக்கும்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும். உங்கள் உடனடித் தேவைகளை பூர்த்தி செய்ய போதிய அளவு பணம் காணப்படாது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படாது. இன்று உங்களை உற்சாகமாக வைத்துக் கொண்டு மற்றவரையும் மகிழ்விக்க வேண்டும். எது வந்தபோதிலும் சமநிலையோடு ஏற்றுக் கொள்ளுங்கள். இன்றைய நாள் உங்களுக்குச் சாதகமாக அமையப் பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

பணிச்சுமை காரணமாக பணியில் சில அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளால் சில பிரச்சினைகளை எதிர் கொள்வீர்கள். பணிகள் இறுக்கமாக காணப்படும். நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று நன்மையான பலன்கள் நடக்கும். உங்கள் கடின உழைப்புக்கான பலன்களைப் பெறுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நல்ல பலனை பெற்றுத் தரும்.

பணிகள் திருப்தியை அளிக்கும். உங்களிடம் காணப்படும் புத்திசாலித்தனம் மற்றும் செயல்திறன் காரணமாக வெற்றிகரமான பலன்கள் கண்டு பிறரின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறலாம். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வைப் பராமரிப்பீர்கள்.

இன்று சாதகமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் பணத் தேவைகளை எந்தவிதமான இடையூறுமின்றி நிறைவேற்றுவீர்கள். இன்று அதிர்ஷ்டமான நாள்.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# வவுனியாவில் மரம் முறிந்து விழுந்ததில் ஓட்டோ முழுமையாகச் சேதமடைந்தது

## மயிரிழையில் தப்பிய முதிய பெண்மணி





**(கி.வசந்தன்)**

வவுனியா – குருமன்காடு பகுதியில் ஓட்டோ ஒன்றின் மீது மரம் முறிந்து விழுந்ததில் ஓட்டோ முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன், பெண் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, மனனார் வீதி, குருமன்காடு சந்திப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றின் முன்னால் ஓட்டோ ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதில் முதிய பெண்மணி ஒருவரும் இருந்துள்ளார். தனியார் மருத்துவ மனை முன்பாக வீதியில் நின்ற மரம் ஒன்று திடீரென முறிந்து விழுந்துள்ளது.

மரம் முறிந்து விழுவதை அவதானித்த முதிய பெண்மணி, ஓட்டோவில் இருந்து இறங்கி ஓடியதால் பாதிப்புக்கள் இன்றி தப்பியுள்ளார். ஓட்டோ மீது மரம் விந்ததால் ஓட்டோ முழுமையாக சேதமடைந்துள்ளது. பின்னர் மரத்தின் கொப்புகளை வெட்டி ஓட்டோவை மீட்ட போதும் அது முழுமையாகச் சேதமடைந்திருந்தது.